**04.03.2026**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 145/2025</u>

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐய்யனார் | | |
| த/பெ | கலியபெருமாள் | | |
| கிராமம் | சின்னபாபுசமுத்திரம் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 42 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 04.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது. ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார். எனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரணை செய்யவில்லை.

,

<u>மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியமாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் அளித்ததற்கு இணங்க, சாட்சி பிறழ் சாட்சியமாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 22/12/2023 ம் தேதி இரவு சுமார் 7.00 மணிக்கு சின்ன பாபு சமுத்திரம் ஆர்ச் அருகில் ரோட்டில் இரு சக்கர வாகனத்தில் 18 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் கண்டமங்கலம் நோக்கி சென்று கொண்டிருந்தான் என்றும், அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த ரவுடி தாண்டவராயன் மகன் அறிவழகன் என்பவன் அவனை வழிமறித்து சிறிய கத்தியை காண்பித்து மிரட்டியவாறு பாக்கெட்டில் இருந்த பணத்தை பிடுங்கிக் கொண்டிருந்தார் என்றும், இதை யாரிடமாவது சொன்னால் உன்னை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார் என்றும், அந்த சிறுவன் பயந்து கொண்டு அங்கிருந்து வண்டியை எடுத்துக் கொண்டு வேகமாக போய்விட்டான் என்றும், இதை நான் சின்ன பாபு சமுத்திரம் ஆர்ச் அருகில் உள்ள எனது வயலில் இருந்து வரும்போது பார்த்தேன் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை:

இல்லை.